**செ.வெ.எண் :655** **நாள்: 06.10.2021**

**தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து அரசு அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும்-மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.எஸ்.விஜயகுமார் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராமங்களில் வடகிழக்கு பருவமழை வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.எஸ்.விஜயகுமார் இ.ஆ.ப. அவர்கள் இன்று (06.10.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் குறித்து கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் அவர்கள் ஆய்வு செய்து கூறியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் மற்றும் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. பூதலூர் ஊராட்சி ஒன்றியம், கோயிலடி ஊராட்சியில் காவிரிக் கரை உடைப்பு ஏற்பட்டு அதனை சீரமைக்கும் பணியினையும், சுக்கம்பார் ஊராட்சியில் புனித அந்தோனியார் மக்கள் மன்றத்தில் வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், கோவிலடி ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில், கிராம சேவை மைய கட்டிடத்தில் கொரானா சிறப்பு தடுப்பூசி முகாம் நடைபெற்று வரும் பணிகளையும், திருக்காட்டுப்பள்ளியில் நீர்அளவு கண்காணிப்பு அறையின் செயல்பாடுகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. பூதலூர் ஊராட்சி ஒன்றியம் அய்யனாபுரம் மற்றும் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம் ஆலியான்வாய்கால் ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கீழ் செயல்பட்டு வரும் நேரடி கொள்முதல் நிலையத்தின் செயல்பாடுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது என்றும் வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்து அலுவலர்களும் உரிய முறையில் மேற்கொண்டு தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.எஸ்.விஜயகுமார் இ.ஆ.ப. அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு.என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.ர்.ளு.ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., துணை ஆட்சியர் பயிற்சி திரு. கௌஷிக் இ.ஆ.ப., உதவி பொறியாளர் (பொதுப்பணித்துறை) திரு. சிவக்குமார், முதுநிலை மண்டல மேலாளர் (த.நு.வா.க) திருமதி.உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**